இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 290 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 17– புதன்கிழமை 31 மே 2023 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 290 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 17 - Wednesday 31 May 2023 - Chennai 10 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.5.2023) டோக்கியோவில் உள்ள உலகின் அதிநவீன தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு நிறுவனமான NEC Future Creation Hub–க்குச் சென்று பார்வையிட்டு, அங்குள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, NEC Future Creation மைய உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.5.2023) டோக்கியோவில் உள்ள உலகின் அதிநவீன தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு நிறுவனமான NEC Future Creation Hub–க்குச் சென்று பார்வையிட்டு, அங்குள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள் குறித்து திரையிட்டுக் காட்டப்பட்ட விபரங்களைக் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, NEC Future Creation மைய உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் தொழில்நுட்பத்தில் புதிய மதிப்பை உருவாக்கும்

# ஜப்பானின் நவீன மின்னணுவியல் தொழில் நிறுவனம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்!

டோக்கியோ, மே 31-

டோக்கியோவில் உள்ள NEC Future Creation Hub - யை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.5.2023) டோக்கியோவில் உள்ள உலகின் அதிநவீன தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு நிறுவனமான NEC Future Creation Hubக்குச் சென்று பார்வையிட்டு, அங்குள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

NEC Future Creation Hub மையமானது, சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு வசதியாக, ஊடாடும் உரையாடல்கள் (Interactive dialogues) மற்றும் நேரடி அனுபவங்கள் மூலம் தொழில்நுட்பமும் வணிகமும் ஒன்றிணையும் இடமாகும். சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் தொழில்நுட்பத்தை உருவாக்குவது முதல், செயற்கை நுண்ணறிவு மற்றும் பயோமெட்ரிக் அங்கீகார தொழில்நுட்பங்களின் வளர்ச்சி வரை புதிய மதிப்பை உருவாக்கி வருகிறது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.5.2023) டோக்கியோவில் உள்ள உலகின் அதிநவீன தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு நிறுவனமான NEC Future Creation Hub–க்குச் சென்று பார்வையிட்டு, அங்குள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள் குறித்து கேட்டறிந்தார். முதல்வர் அவர்களுக்கு அந்த நிறுவனத்தின் அதிகாரி விளக்கம் அளித்தார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, NEC Future Creation மைய உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**மன அழுத்தமற்ற விமானப் பயணம்!**

NEC Future Creation மையத்திற்குச் சென்று பார்வையிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், விமான நிலையங்களில் மின்னணு சுங்க அறிவிப்பு வாயில் மூலமாக முக அங்கீகார தொழில்நுட்பம், வேகமான சுங்க அனுமதி, நெரிசலற்ற சுங்க ஆய்வு தளங்கள், காத்திருப்பு நேரத்தை குறைத்தல் ஆகிய மன அழுத்தம் இல்லாத விமான பயணத்தை மேற்கொள்வதற்கான நடைமுறை வழிமுறைகள் குறித்து மைய உயர் அலுவலர்கள் விளக்கினார்கள்.

இந்த அதிநவீன விமான பயண முறை உலகின் பரபரப்பான விமான நிலையமான அட்லாண்டா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் விமான நிலையங்களிலும் செயல்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தனர்.

NEC நிறுவனம், துறைமுக கண்காணிப்பு, தொழிற்சாலை மேலாண்மை, ரயில் போக்குவரத்து மேலாண்மை தொடர்பு, சாலை போக்குவரத்து மேலாண்மை, தீயணைப்பு அமைப்புகள், தகவல் தொடர்பு அமைப்புகள், விமான போக்குவரத்து கட்டுப்பாடு, வங்கி ஏ.டி.எம்.கள், டிஜிட்டல் தொலைக்காட்சி பரிமாற்றம், மின்னணு அரசாங்கம், நீர் மேலாண்மை, செயற்கைக் கோள் தகவல் தொடர்பு போன்ற கடல் முதல் விண்வெளி வரை அனைத்து நிர்வாகத்திலும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தீர்வு கண்டு வருவதைப் பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் விளக்கப்பட்டது.

**தொழில்நுட்பம் குறித்து ஆலோசனை!**

இந்த மையத்தை பார்வையிட்ட நிகழ்வில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மைய உயர் அலுவலர்களுடன், தமிழ்நாட்டிற்கான முக அங்கீகார செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங் நோக்கம், தமிழ்நாடு அரசின் நிர்வாகத்திலும், பொது பயன்பாட்டு வசதிகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, NEC Future Creation மைய உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### மணிப்பூர் கலவரம் குறித்து

# உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை!

## குடியரசுத் தலைவரிடம் காங்கிரஸ் மனு!

புதுடெல்லி, மே 31 –

மணிப்பூர் கலவரம் குறித்து ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தி குடியரசுத் தலைவரிடம் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மனு அளித்துள்ளார்.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மேதேயி சமுதாய மக்கள் எஸ்.டி. அந்தஸ்து கோரி வருகின்றனர். இதனை எதிர்த்து குகி, நாகா உள்ளிட்ட பழங்குடியின மாணவர் சங்கம் சார்பில் கடந்த 3ம் தேதி பேரணி நடைபெற்றது.

இதனால் மேதேயி சமுதாயத்தினருக்கும் பிற பழங்குடியின சமுதாயத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. மாநிலம் முழுவதும் வன்முறை பரவியது. இதையடுத்து, ராணுவம், அசாம் ரைபிள்ஸ் படையினர், சிஆர்பிஎப் வீரர்கள் வரவழைக்கப்பட்டனர். கலவரத்துக்கு இதுவரை 75க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்நிலையில், கடந்த 27ம் தேதி இரவு பல பகுதிகளில் மீண்டும் கலவரம் ஏற்பட்டது. வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்தும் வகையில், மணிப்பூரில் இணைய சேவை முடக்கப்பட்டுள்ளது. இதனால் மணிப்பூரில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சந்தித்து பேசினார். அப்போது, மணிப்பூர் கலவரம் குறித்து ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், மணிப்பூர் கலவரம் குறித்து பணியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனபன உள்ளிட்ட 12 கோரிக்கைகள் அடங்கிய மனுவை குடியரசுத்தலைவரிடம் அளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

---

### கர்நாடகாவில்

# புதிய தேசிய கல்விக் கொள்கையை அனுமதிக்க முடியாது!

## முதலமைச்சர் சித்தராமையா திட்டவட்டம்!

பெங்களூரு, மே 31 –

கர்நாடக முதலமைச்சர் சித்த ராமையாவை பெங்களூருவில், 50க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் நேரில் சந்தித்தனர். எழுத்தாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை பெற்றுக் கொண்ட முதலமைச்சர் சித்தராமையா, நாட்டின் பன்முகத்தன்மையை சிதைக்க நினைக்கும் பா.ஜ.க.வை எதிர்த்து வலுவான குரல் கொடுத்து வரும் எழுத்தாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

கலாச்சார காவலர்கள் என்ற போர்வையில் எழுத்தாளர்களை அச்சுறுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே டி.ஜி.பி.க்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எழுத்தா



ளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், தலித் இயக்கங்கள் மீது முந்தைய பா.ஜ.க. ஆட்சியில் தொடரப்பட்ட பொய் வழக்குகள் வாபஸ் பெறப்படும் எனவும் அவர் உறுதி அளித்தார். கர்நாடகாவின் மதநல்லிணக்கம், மதச்சார்பின்மையை சமரசம் செய்யும் பேச்சுக்கே இடமில்லை என்று சித்தராமையா தெரிவித்தார்.

புதிய கல்வி கொள்கை என்ற பெயரில் பள்ளிப் புத்தகங்கள் மூலம் குழந்தைகளின் மனதை மாசுபடுத்தி, விஷத்தை விதைக்கும் பாடங்களை அனுமதிக்க மாட்டோம் என்று கர்நாடக முதலமைச்சர் கூறினார்.

இந்தக் கல்வி ஆண்டு தொடங்கவுள்ள நிலையில் கல்வியாளர்களுடன் ஆலோசித்து பாடத்திட்டத்தில் குழந்தைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாத அளவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். வெறுப்பு அரசியலை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்று கூறிய கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, சட்டத்தை கையில் எடுத்து வகுப்பு வாத கலவரம் செய்பவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என எச்சரித்தார்.